கல்குடா கல்வி வலய வளநிலைப் பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த. (உ.த) – 2018 ஆனி

தரம் - 13(2018) | **தவணை – 6** | **பரத நாட்டியம் -I** | **நேரம் : 2மணி**

சுட்டெண்/ பெயர் :

பகுதி – I
மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

1. "தொம்கிட கிடததி" எனும் சொற்கட்டு இடம்பெறும் உருப்படி
   1. அலாரிப்பு 2. கௌத்துவம் 3. ஜதிஸ்வரம்
   4. சப்தம் 5. பதவர்ணம்

2. கண்டிய நடனத்தை ஒத்ததாகக் காணப்படும் நடன வடிவம்
   1. பரதம் 2. ஒடிஸி 3. மணிப்புரி
   4. கதக் 5. கதகளி

3. ;;;; தகிடததிங்கிணதொம் தகிடததிங்கிண தொம் தகிடததிங்கிண தொம் // இங்கு காணப்படும் ததிங்கிணத் தொம்
   1. திஸ்ரம் 2. சதுஸ்ரம் 3. கண்டம்
   4. மிஸ்ரம் 5. சங்கீர்ணம்

4. நாதாந்த தாண்டவமான ஆனந்தத் தாண்டவம் சமர்ப்பித்த இடம்
   1. கனகசபை 2. சிற்சபை 3. தாம்ரசபை
   4. ரஜிதசபை 5. சித்திரசபை

5. "தண்டபாதம்" எனும் தாண்டவம் இடம்பெறுவது
   1. 54 2. 63 3. 82 4. 69 5. 96

6. விஷ்ணுவின் வில் நாண் அசைந்த ஒலியினால் தோன்றிய விருத்தி
   1. கைசிகி 2. ஆரபாடி 3. சங்காத்யம்
   4. சாத்வதி 5. பாரதி

7. "வாத்சாயனார்" எனும் ஆசான் எழுதிய நூல்
   1. சிலம்பம் 2. சிலப்பதிகாரம் 3. அபிநயதர்ப்பணம்
   4. நாட்டியசாஸ்திரம் 5. காமசூத்திரம்

8. ஜலதரங்கம் எனும் வாத்தியம்
   1. தோல்வாத்தியம் 2. நரம்புவாத்தியம் 3. கஞ்சற்கருவி
   4. துளைக்கருவி 5. காற்றுக்கருவி

9. "கொஹேம்ப கங்காரிய" எனும் சடங்கின் பிரிவுகள்
   1. 10 2. 11 3. 12 4. 20 5. 21

10. அண்மையில் 76 வயதில் இறைபதம் எய்திய எம்மண்ணில் அவதரித்த தலைக்கோல் விருது பெற்ற ஆசான்
    1. திரு. ஏரம்பு சுப்பையா 2. ருக்மணிதேவி அருண்டேல்
    3. திரு. என். வீரமணிஜயர் 4. திருமதி. லீலாம்பிகை செல்வராசா
    5. திரு. V.K. நல்லையா

11. கரணம் என்பது
    1. உடல் அசைவுகள், பாதங்கள், திருத்தஹஸ்தங்களின் சேர்க்கை
    2. நிலையாக நிற்றல் 3. அடவு
    4. தீர்மானத்தை ஒத்தது 5. அசைவு

12. ராஜராஜனின் தங்கை செம்பியன் மாதவி நடனமாடுவது போன்ற சிற்பம் அமைந்த கோயில்

www.kedu.lk

1. பிருகதீஸ்வரர்
2. ரவிகுலமாணிக்க ஈஸ்வரர்
3. அருணாசலேஸ்வரர்
4. கபாலீஸ்வரர்
5. சோமேஸ்வரர்

13. சாக்கிய பாவம் என்பது
1. தாய்க்கும் சேய்க்கும் இடையேயானது
2. ஊழியருக்கும் வீட்டுத்தலைவனுக்கும் இடையேயானது
3. காதலனுக்கும் காதலிக்கும் இடையேயானது
4. கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயானது
5. நண்பர்களுக்கு இடையேயானது

14. ஐம்புலன்களையும் தனது பூரண கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பவன்
1. உத்தமநாயகன்
2. மத்திம நாயகன்
3. அதம நாயகன்
4. சடன்
5. தஷிணன்

15. சோடசோபசாரம் எனக் கூறப்படும் ஆலய வழிபாட்டு முறையில் 15 ஆவதாக கூறப்படும் அங்கம்
1. வேத உத்சாடனம்
2. திருத்தியோபசாரம
3. தீபராதனை
4. அபிஷேகம்
5. கீதவாத்தியம்

16. தமிழ் பதங்களின் முன்னோடி என அழைக்கப்படுவர்
1. அருணாசலக்கவிராயர்
2. முத்துத்தாண்டவர்
3. வடிவேலு
4. பொன்னையா
5. சிவானந்தம்

17. "ஓ கனேஸ்யாம்! காலை நேரத்தில் யாரைத் திருப்திபடுத்த நீ என்னிடம் வந்தாய்? இதில் வரும் நாயகி
1. விப்ரலதா
2. விரஹோத் கண்டிதா
3. கண்டிதா
4. ப்ரோஷிதபத்தோ
5. கலஹாந்தரிதா

18. சங்கமருவிய காலத்தில் நடனம் ஆடியதாக கூறப்படும் பெண்கள்
1. கணிகையர்
2. கோடியர்
3. கூத்தியர்
4. வயிரியர்
5. பொருநர்

19. "கீத கோவிந்தம்" இக் காவியத்தின் கதாபாத்திரங்கள்
1. ராதாகிருஷ்ணா
2. கிருஷ்ணா, கோவியர்
3. ருக்மணி, கிருஷ்ணா
4. ராதா, கிருஷ்ணா, சகி
5. பாமா, ருக்மணி, கிருஷ்ணா

20. நடராஜ தத்துவத்தில் சங்கார செயலை குறிக்கும் ஹஸ்தம்
1. சிம்ஹமுக
2. திரிசூல
3. டமருக
4. பதாக
5. அலபத்ம்

21. "தெய்வீக ஆடற்கலை" எனும் அரிய நூலை எழுதியவர்
1. வழுவூர் இராமையாபிள்ளை
2. ருக்மணிதேவி அருண்டேல்
3. அடையார் லஷ்மணன்
4. ஈ கிருஷ்ணையர்
5. பாலசரஸ்வதி

22. சரணப்பகுதியில் மட்டும் பெரும்பாலும் சாகியத்தை எடுத்துக்கொள்ளும் உருப்படி
1. வர்ணம்
2. ஜாவளி
3. தில்லானா
4. கௌத்துவம்
5. சப்தம்

23. மகரிமரபு காணப்பட்ட ஆடல்
1. குச்சுப்புடி
2. பரதநாட்டியம்
3. கதக்
4. கதகளி
5. ஒடிஸி

24. "மோகினி ஆட்டக்கலை" எனும் நூலை எழுதியவர்
1. குஞ்சன் நம்பியார்
2. சிவாஜிபாரதி
3. வள்ளத்தோல்
4. கார்த்திகைத்திருநாயர் மஹாராஜா
5. ஷேஷ்ரக்ஞர்

25. நீர் கற்ற வர்ணம் அமையப் பெற்ற ராகம்
1. ஆனந்த பைரவி
2. சுருட்டி
3. ஆரபி
4. தன்னியாசி
5. கல்யாணி

www.keou.lk

26. உதர பந்தம் என்பது
1. முயலகன் 2. பாம்பணி 3. கோவணம்
4. திருமேனி 5. பூனூல்

27. ஆடற்கலையின் மகுடமாக விளங்குவது
1. சிலப்பதிகாரம் 2. அகநானூறு 3. புறநானூறு
4. நான்குவேதம் 5. தொல்காப்பியம்

28. வேந்தர்களுக்காக ஆடப்படும் கூத்து
1. வேட்டுவர் வரி 2. சாக்கையர் கூத்து 3. வேத்தியல்
4. பொதுவியல் 5. பேடிக்கூத்து

29. மத்தளக் கட்டை கடயப்படுவது
1. அரசு 2. மா 3. பூவரசு
4. கொண்டல் 5. தேக்கு

30. கவிக்குஞ்சரபாரதியார், இராமலிங்கசுவாமிகள், சிதம்பரபாரதியார் போன்ற பெரியார்களால் இயற்றப்பட்டது
1. அலாரிப்பு 2. ஜதிஸ்வரம் 3. சப்தம்
4. பதவர்ணம் 5. பதம்

31. வீர ரஸத்திற்குரிய இறைவன்
1. விஷ்னு 2. எமன் 3. ருத்ரன்
4. இந்திரன் 5. பிரம்மன்

32. சிருங்காரத்தின் வகைகள்
1. 2 2. 3 3. 4 4. 5 5. 6

33. கணவனை உதறித்தள்ளி பின் வருந்துபவர்
1. வாசகசஜ்ஜிதா 2. விப்ரலதா 3. கண்டிதா
4. கலகாந்தரிதா 5. விரகோத்கண்டிதா

34. நகைச்சுவை கொண்டதும் மிருகத் தொன்மையானதுமான சிங்கள மக்களின் கலை வடிவம்
1. கொஹெம்பகங்கார்ய 2. கிரிதேவி 3. சொக்கரி
4. வெஸ் 5. நையாண்டி

35. ''ஆடுவோமே பள்ளு பாடுவோமே'' என்ற தேசியப் பாடலுக்கு நடன அமைப்புச்செய்து பரதக் கலைக்கு புதியதொரு பரிணாமம் அளித்தவர்
1. கணம் கிருஷ்ணையர் 2. ருக்மணி அம்மையார்
3. பாலசரஸ்வதி அம்மையார் 4. பொன்னையாபிள்ளை
5. இராமையாப்பிள்ளை

36. ''சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகம்'' நிறுவிய ஆண்டு
1. 1922 2. 1982 3. 1962 4. 1932 5. 1952

37. ''யக்ஷ கானம்'' சிறப்புற வியாங்கம் பெற்ற காலம்
1. சங்ககாலம் 2. சங்கமருவியகாலம் 3. சோழர்காலம்
4. நாயக்கர் காலம் 5. பல்லவர்காலம்

38. ''ஈசான குருகுகே பத்ததி'' எனும் நூலில் கூறப்படுவது
1. இறைபக்தி 2. கோயில் வழிபாடு
3. நிருத்தியத்தின் முக்கியத்துவம் 4. திரியை முறை
5. பண்ணுடன் பதிகம் பாடல்

39. ஷடாங்களின் எண்ணிக்கை
1. 6 2. 7 3. 8 4. 9 5. 10

40. பர்வத ஜதி என அழைக்கப்படுவது
1. டமருகஜதி 2. விஷமஜதி 3. கோபுசஜதி
4. ஸ்ரோதோவகஜதி 5. மிருதங்க ஜதி

41. தோடிபுவா மரபு, படைக்கலமரபு என்பன நடன மரபுகள் அமையப்பெற்ற ஆடல் வடிவம்

www.kedu.lk

1. ஒடிஸி 2. மணிப்புரி 3. கதக்
4. பரதம் 5. கதகளி

42. மூன்று குதிரையாட்டத்தின் மூலம் ஆடிக்காட்டப்படுவது
1. போட்டியோடு ஆடல் பாடல்
2. பிறப்பு வளர்ப்பு பற்றியது
3. வாக்கு வாதத்திலிருந்து காதல் பிறத்தல்
4. நம் மீது ஏறி வெற்றி பெற்ற வீரன் பற்றியது
5. பெண் குதிரை தனது பெருமையைச் சொல்வது

43. நீர் கற்கும் ஜாவளி எனும் உருப்படி அமையப்பெற்ற ராகம்
1. சுருட்டி 2. கானடா 3. ஆரபி
4. ஜாபி 5. மோகனம்

44. உயர்தர மாணவர் கற்கும் மெய்யடவுள் அமைந்த உருப்படி
1. ஜதிஸ்வரம் 2. பதம் 3. கீர்த்தனம்
4. பதவர்ணம் 5. தில்லானா

45. ''குயிலே உனக்கனந்த கோடி நமஸ்காரம்'' எனும் பதம் இயற்றியவர்
1. ஷேஷ்ரஞ்சர் 2. கனம் கிருஷ்ணையர் 3. பாரதியார்
4. சுத்தானந்தா பாரதியார் 5. கவிக்குஞ்சரபாரதியார்

46. சோழர் காலத்தில் எழுந்த நூல்களுள் ஒன்று
1. சந்தம் 2. பதிற்றுபபத்து 3. அகநானூறு
4. சிலப்பதிகாரம் 5. குண்டலகேசி

47. தேவார பாடல்களைச் சிறப்புற அபிநயித்துக் காட்டிய ஆடல் மகள் ஒருத்திக்கு வழங்கியது
1. தலைக்கோலி 2. ஐநூற்றுவத்தலைக்கோலி
3. வீரபரணத்தலைக்கோலி 4. சிவஞ்ஞான சம்பந்தர் தலைக்கோலி
5. உறவாக்கின தலைக்கோலி

48. ''அன்னா பல்லோவா'' இந்திய விஜயம் செய்த ஆண்டு
1. 1822 2. 1922 3. 1622 4. 1722 5. 1923

49. சீதை அசோக வனத்தில் அனுமானைக் கண்ட வேளை சீதைக்கு பிறந்த ரஸம்
1. கருணா, சாந்தம் 2. ஹாஸ்யம், அற்புதம் 3. பயம், அற்புதம்
4. வீரம், கருணா 5. அற்புதம், பீபந்ஷம்

50. 84 அட்ஷரங்களைக் கொண்ட மட்டிய தாயத்தின் ஜாதி – கதி முறையே
1. சதுஸ்ரஜாதி – சங்கீர்ணகதி 2. கண்டஜாதி – மிஸ்ரகதி
3. கண்டஜாதி – கண்டகதி 4. கண்டஜாதி – திஸ்ரகதி
5. திஸ்ரஜாதி – சதுஸ்ரகதி

(5x2 = 100 புள்ளிகள்)

www.ikeu.lk

கல்குடா கல்வி வலய வளநிலைப் பரீட்சை சபை

பயிற்சிப் பரீட்சை க.பொ.த. (உ.த) - 2018

தரம் - 13(2018) | **தவணை – 6** | **பரத நாட்டியம் -II** | **நேரம் : 3மணி**

சுட்டெண்/ பெயர் :

அறிவுறுத்தல்கள் -:

- **பகுதி I இல் முதலாம் வினா உட்பட இரண்டு வினாக்களுக்கும் பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களுக்குமாக மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக**

பகுதி - I

1. 1) நீர் கற்ற வர்ணத்தின் ராக தாளத்தை குறிப்பிடுக. (2 புள்ளி)

2) அவ்வர்ணத்தின் நாயகன் நாயகியைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

3) நீர் கற்ற பதவர்ணத்தின் முத்தாய்ஸ்வரத்தினையும் அதன் கோர்வையினையும் 2ம் சரண ஸ்வரத்திற்குரிய சாகித்தியத்தையும் தாள அங்க அடையாளங்களுடன் தருக.
(16 புள்ளி)

2. குச்சுப்புடி நடனக்கலை வடிவத்தினை பின்வரும் அடிப்படையில் ஆராய்க.

- தோற்றம்
- வளர்ச்சி
- பயன்படும் இசை, இசைக்கருவி
- ஆடல்முறை
- ஆடை ஆபரணம் ஒப்பனை (20 புள்ளி)

3. நாட்டியத்திற்குரிய மேடை அமைப்பு முறையினை பின்வரும் அடிப்படையில் ஆராய்க.
நாட்டிய அரங்கம், ஒலி ஒளி காட்சி விதானிப்பு
(20 புள்ளி)

பகுதி - II

4. பின்வருவனவற்றிக்குச் சிறு குறிப்பு எழுதுக.

1) தலைக்கோலி
2) மோகினி ஆட்டம்
3) ஏழு தாண்டவங்கள்
4) ஷேத்ரக்ஞர் பதங்கள் (20 புள்ளி)

5. தாள தஸப்பிராணன்களை விரிவாக உதாரணங்களுடன் விளக்குக. (20 புள்ளி)

6. நாட்டியக் கலையில் " அபிநய அரசி" எனப் புகழப்படும் நாட்டியக் கலைஞரின் வாழ்க்கை வரலாற்றினையும் அவர் ஆற்றிய தொண்டினையும் விபரிக்க? (20 புள்ளி)

7. "கலைகள் செழிப்புற்று விளங்கிய காலம்" எனவும் நாட்டியக்கலையில் "தலைக்கோலி பட்டம் வழங்கிய காலம்" எனவும் கூறப்படும் பொற்காலத்தினை ஆராய்ந்து விளக்குக?
(20 புள்ளி)

8. "நாட்டிய அவைக்காற்றுகையில் பக்கவாத்தியங்களின் ஆதிக்கம்" இக்கூற்றினை ஆராய்ந்து விளக்குக? (20 புள்ளி)

www.lkedu.lk